*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*13 08-2025 WEDNESDAY 6.30 PM*
*வணக்கம்-மாநிலச் செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

*1. இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.*

*2. தமிழகம் முழுவதும் குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு மூளைக்காய்ச்சல் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதாக மாநில அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

*3. அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் மழைநீர் சேமிப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்*

*4. சென்னையில் அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தூய்மைப் பணியாளர்களை அப்புறப்படுத்த தமிழக அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*5. Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்குமாறு மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*மத்தியப்பிரதேசத்தின் விதிஷாவில் உள்ள தமது இல்லத்தில் அவர் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.*

*இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தேசியக்கொடி நமது பெருமை, கௌரவம் மற்றும் எண்ணற்றோரின் தியாகத்தின் அடையாளமாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*தமிழகத்திலும் இந்த இயக்கத்தின் பல்வேறு இடங்களில் தேசியக்கொடி பேரணி நடைபெற்றது.*

*நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் நடைபெற்ற பேரணியில், ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - கண்ணன் 34 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*தமிழகம் முழுவதும் 27 லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு மூளைக்காய்ச்சல் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் இந்த முகாமை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இன்று முதல் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.*

*இதன்படி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, அடுத்த மாதம் 12ஆம் தேதிவரை இந்த தடுப்பூசி போடப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.*

*அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி செலுத்துவதை உறுதி செய்யும் வகையில், சம்மந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் திரு. மா.சுப்பிரமணியன் கேட்டுக் கொண்டார்.*

*>>>>><<<<<*

தமிழகத்தில் 20 இடங்களில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற சுற்றுலாத்துறை அதிகாரிகள் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், பூம்புகார், மாமல்லபுரம், முதலியார்குப்பம், ஏற்காடு, கொல்லிமலை, கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்களில் சுமார் 78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகளை, விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

>>>>><<<<<

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் நீர்நிலைகளை தூர்வாரி மழைநீரை சேமிக்க முன்னுரிமை அளிக்கப்பட்டதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருப்பத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழைக்காலங்களில் உபரிநீர் சேமிக்கப்பட்டதன் காரணமாக, நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்து, பாசனத்திற்கு தேவையான தண்ணீர் வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

ஏழை மாணவர்கள் நலனுக்காக அஇஅதிமுக ஆட்சியில், அரசு பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட நிலையில், தற்போதைய திமுக அரசு 207 பள்ளிகளை மூடிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர் மாசுபடுவதை தடுக்க தொழிற்சாலை கழிவுநீரை, சுத்திகரித்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தினார்.

>>>>><<<<<

சென்னை ரிப்பன் மாளிகை முன்பு, போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தூய்மைப் பணியாளர்களை அப்புறப்படுத்த தமிழக அரசுக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, முறையான அனுமதியின்றி போராட்டம் நடத்தி வரும் தூய்மைப் பணியாளர்களை கலைந்து செல்ல உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா தலைமையிலான அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், நடைபாதையை ஆக்கிரமித்து, போராட்டம் நடத்த முடியாது என்பதால், அவர்களை அப்புறப்படுத்த உத்தரவிட்டனர்.

எனினும், அரசுக்கு முறையாக விண்ணப்பித்து, அவர்களுக்கு ஒதுக்கப்படும் இடத்தில் போராட்டம் நடத்தலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதனிடையே. திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய தூய்மைப் பணியாளர் நலவாரியத் தலைவர் திரு. ஆறுச்சாமி, தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகள் குறித்து முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று, அவர்களது போராட்டத்திற்கு தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தங்களது கோரிக்கைகள் குறித்து, அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவு ஏதும் எட்டப்படாததால், போராட்டம் தொடரும் என்று தூய்மைப் பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.

>>>>><<<<<

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில், ஆளுநர் திரு. ஆர். என். ரவி பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

பல்வேறு பாடப்பிரிவுகளில் முதல் மதிப்பெண் பெற்ற 109 பேருக்கு தங்கப்பதக்கங்களையும் ஆளுநர் வழங்கினார்.

விழாவில் மும்பை இந்திய புவி காந்தவியல் நிறுவனத்தின் இயக்குநர் திரு. Dimri சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றினார்.

>>>>><<<<<

சேலம் தொலைத்தொடர்பு மண்டலத்திற்கு உட்பட்ட 3 மாவட்டங்களில், 4ஜி சேவை வழங்க பிஎஸ்என்எல் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அதன் இணைப் பொதுமேலாளர் திருமதி. சுபா தெரிவித்துள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தடையற்ற மற்றும் துல்லியமான சேவைகளை வழங்க ஏதுவாக, புதிய தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

(சவுண்ட் பைட் – சுபா 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சுமார் 21 கோடி ரூபாய்க்கான காசோலையை அமைச்சர்கள் திரு. தாமோ. அன்பரசன், திரு. சேகர்பாபு ஆகியோர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரிடம் வழங்கினர்.

>>>>><<<<<

வேலூர் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தில், உயிரி தொழில்நுட்பம் குறித்த இரண்டு நாள் பன்னாட்டு கருத்தரங்கை துணைவேந்தர் திரு. ஆறுமுகம் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் பட்டாசு ஆலைகளில் மூன்றாவது நாளாக இன்றும் வருமான வரி சோதனை நடைபெற்றது.

>>>>><<<<<

அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக் கூடாது என்பதை வலியுறுத்தி ஈரோட்டில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

>>>>><<<<<

நாமக்கல் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரடி சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் நாளை முதல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று அரசு தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம், பூனாயிருப்பு தொடக்கப்பள்ளியில் காலை உணவு உட்கொண்ட மாணவர்கள் 8 பேருக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டதை அடுத்து, கும்பகோணம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

Saipan சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemant காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நார்தன் மரியானாஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 4-15, 15-9, 15-7 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Nodoka Sunakawa-வை வென்றார்.

>>>>><<<<<

***இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shanker Heisnam – Ajay Malik இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-1 என்ற செட்கணக்கில் தென்னாப்பிரிக்காவின் Ruben – Ethan இணையை வென்றது.***

***>>>>><<<<<***

***தாய்லாந்து சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Pranay Katta காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.***

***ஆடவர் ஒற்றையர் பிரிவு, முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 21-10, 15-21, 21-18 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Tan Zhen Tsheng-ஐ வென்றார்.***

***மகளிர் ஒற்றையர் பிரிவில் Adita Rao மற்றும் Mansi Singh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.***

***மகளிர் இரட்டையர் பிரிவில் Apoorva – Sakshi இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.***

***>>>>>END<<<<<***